
Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 17, 2025

திங்கட்கிழமை 17, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 180 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# சா/த பரீட்சை இன்று ஆரம்பம்

2024 (2025) கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை, திங்கட்கிழமை (17) ஆரம்பமாகி, எதிர்வரும் 26ஆம் திகதி நிறைவடையும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘பட்டலந்த’ ஆணைக்குழு அறிக்கை

# “ரணில் தாமதம்”

> முன்னாள் ஜனாதிபதி ரணில், பட்டலந்த சம்பவம் குறித்து A முதல் Z வரை அனைத்தையும் அறிந்தவர். ஆனால், சமீபத்திய நேர்காணலில் அல் ஜசீரா தொலைக்காட்சி அதைப் பற்றிக் கூறும் வரை அவர் அதைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை குறித்துப் பேசுவதற்கு இப்போது மிகவும் தாமதமாகிவிட்டதாகக் கூறிய அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்றார்.

வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், ஏப்ரல் 10 மற்றும் மே மாதங்களில் இரண்டு நாள் விவாதத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

“இந்த விவகாரம் தொடர்பாக ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அறிக்கையை நாங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்புவோம்,” என்று அவர் கூறினார்.

தொடர்ச்சி P2


# ரணில் நிராகரிப்பு

> நான், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தேன். பட்டலந்த ஆணைக்குழு, அரசியல் சேறு பூசும் நடவடிக்கைக்காக மட்டுமே நியமிக்கப்பட்டது. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை

பட்டலந்த வீட்டு தொகுதியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு இரண்டு வீடுகளை வழங்கியமை தொடர்பில் அதற்கு நான், மறைமுகப் பொறுப்பாளி என்று பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த அறிக்கையைத் தான் முழுமையாக நிராகரிப்பதாகக் கூறியுள்ளார்.

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் மேலும் கருத்துரைத்துள்ள ரணில் விக்ரமசிங்க, 1987 இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், மக்கள் விடுதலை முன்னணி, நாடு முழுவதும் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தது. அந்த நேரத்தில் நாட்டில் உள்ள கேந்திர நிலையங்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரம் ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியால் அமைச்சரவை அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# ஏப்ரல் 10 விவாதம்

“பட்டலந்த வீட்டுத் தொகுதியில் சட்டவிரோத தடுப்பு முகாம் மற்றும் சித்திரவதை முகாம் அமைத்து அவற்றை நடத்திச் சென்றமை தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை” பாராளுமன்றத்தில், மார்ச் 14ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த அறிக்கை தொடர்பில், ஏப்ரல் 10ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை விவாதம் நடத்தப்படவுள்ளது. இந்நிலையில், இதற்கான இரண்டு நாள் விவாதத்தில் பிறிதொரு தினத்தை மே மாதத்தில் ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்ன தலைமையில் சனிக்கிழமை (15) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை மார்ச் 20ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தின் பின்னர் பி.ப 6 மணி முதல் 8 மணி வரை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், பாராளுமன்றத்தை ஏப்ரல் 8, 9 மற்றும் 10ஆம் திகதிகளில் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய ஏப்ரல் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கான விவாதத்திற்காக ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ஏப்ரல் 09ஆம் திகதி புதன்கிழமை பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டுக்கான விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



## “இந்து சமுத்திரமே பாலைவனம் ஆகிவிடும்”

“இந்திய மீனவர்கள் இழுவை படகைப் பயன்படுத்தி, அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு கடல் வளத்தை அழித்தால் இந்து சமுத்திரமே பாலைவனம் ஆகக்கூடும்” என கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


## “மரணிக்கும் நிலையில் தமிழரசுக் கட்சி”

■ நிதர்ஷன் வினோத்

“தமிழரசுக் கட்சி மரணிக்கும் நிலைக்கு வந்து விட்டது. அதை இனி ஒருபோதும் உயிர்ப்பிக்க முடியாது” என ஜனநாயக தமிழரசு கட்சியின் பிரமுகர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “மு.கா. தேசிய பட்டியல் சுழலும்”





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் தனது பதவியை இராஜினாமா செய்தது முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் சரித்திரத்தில் மாத்திரம் அல்ல இலங்கை முஸ்லிம் அரசியல் சரித்திரத்திலும் ஒரு தாக்கத்தை உருவாக்கிய நிகழ்வாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகமும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றியது சம்பந்தமாக முன்னுதாரணமாக இருந்தது மாத்திரமல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சரித்திரத்தில் அக்கட்சியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தனக்கு வழங்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நான்கு மாதங்களுக்குள் இராஜினாமா செய்த வரலாற்றில் இது முதல் தடவையாகும்

இந்த வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை எவருக்கும் வழங்கப்பட மாட்டாது.

தொடர்ச்சி P2

## 51 குடும்பங்களுக்கு ஆகஸ்டில் வீடுகள்



பதுளை மாவட்டம் பூனாகலை கபரகல தோட்டத்தில், 2023 மார்ச் மாதம் ஏற்பட்ட மண் சரிவினால் சுமார் 51 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## “5 ஆண்டுகள் பரீட்சை தடை”



தடை செய்யப்பட்ட பொருட்களைப் பரீட்சை மத்திய நிலையத்துக்குள் கொண்டு வந்தால், ஐந்து ஆண்டுகள் பரீட்சை தடை விதிக்கப்படலாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை திங்கட்கிழமை (17) ஆரம்பமாகும் என்றும், ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## கிழக்கு தமிழர் கூட்டமைப்பு உதயம்

■ கனகராசா சரவணன், எம்.எஸ்.எம்.நூர்தீன்,




கிழக்குத் தமிழர்களின் வளர்ச்சியையும் சுபிட்சத்தையும் கருத்தில் கொண்டு, பல்லின சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் வண்ணம் பலமிக்க அரசியல் சக்தி ஒன்றைக் கட்டமைக்கும் முயற்சியில் ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ எனும் புதிய கூட்டமைப்பு உதயமானது அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

‘பட்டலந்த’ ஆணைக்குழு அறிக்கை

# “ரணில் தாமதம்”

விவாதத்தை நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி குழுவும் வாதிட்டதாக அமைச்சர் கூறினார். மேலும், விவாதத்திற்கான திகதியை அரசாங்கம் ஒதுக்க முடிந்தது என்றும் அவர் கூறினார்.

“நாட்டில் ஜனநாயகம் மற்றும் நீதிக்காக நாங்கள் விவாதம் நடத்துவோம். மக்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்” என்று அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பட்டலந்த சம்பவம் குறித்து A முதல் Z வரை அனைத்தையும் அறிந்தவர் என்றும், சமீபத்திய நேர்காணலின் போது அல் ஜசீரா தொலைக்காட்சி அதைப் பற்றிக் கூறும் வரை அவர் அதைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை. இன்று இல்லை. கடந்த 35 ஆண்டுகளாக ரணில் இதைப் பற்றிப் பேசியிருக்கலாம். அல் ஜசீரா அதைப் பற்றிப் பேசும் வரை அவர் எதுவும் சொல்லவில்லை. ரணில் இப்போது மிகவும் தாமதமாகிவிட்டார்,” என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

# ரணில் நிராகரிப்பு

பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், டீசல் மின் உற்பத்தி நிலையம், மஹாவெலியில் இருந்து கொழும்புக்கு மின்சாரத்தை விநியோகித்த மத்திய நிலையங்கள், வர்த்தக வலயங்கள், பொருளாதார மத்திய நிலையங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக இராணுவம் அழைக்கப்பட்டது.

பாதுகாப்பு தரப்பின் தங்கியிருப்பதற்காக இலங்கை உர தயாரிப்பு கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான அந்த காலத்தில் கைவிடப்பட்ட கட்டிடம் மற்றும் வீடுகள் சிலவற்றை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அப்போது, இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் சிலர், அந்த வீடுகளில் குடியிருந்தனர்.

அந்த வன்முறை காலத்தில் சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி, அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரியை படுகொலை செய்தனர்.

அப்போது பாதுகாப்பு பிரதி அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன, என்னுடன் பேசினார். இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்புக்காக, வீட்டுத் தொகுதியில் வெற்றிடமாக இருக்கும் வீடுகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனடிப்படையில், அந்த வீடுகளில் ஒன்றை களனி பொலிஸ் அதிகாரி நளின் தெல்கொடவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கிடையில், மாகாண சபை உறுப்பினர்கள், கூட்டுறவு சங்கத் தலைவர்கள், பொலிஸ் சார்ஜன்ட் உள்ளிட்ட பலரும் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன், இன்னும் சில மாகாண சபை உறுப்பினர்களின் வீடுகளின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதன்பின்னர், பட்டலந்த பிரதேசத்தில் வதைமுகாம் இருந்ததாக கூறி, 1994ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆணைக்குழுவை நியமித்தார். அந்த ஆணைக்குழு முன்னிலையில் பல நபர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். என்னை சாட்சியாளராக மட்டுமே அழைத்தனர்.

அப்போது நான், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தேன். பட்டலந்த ஆணைக்குழு, அரசியல் சேறு பூசும் நடவடிக்கைக்காக மட்டுமே நியமிக்கப்பட்டது. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை.

அறிக்கையின் தீர்மானத்தின் பிரகாரம், அமைச்சர் என்ற வகையில், பொலிஸ் கண்காணிப்பாளர் ஊடாக பொலிஸ் அதிகாரிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டமை பிழையானது என்று. வீடுகளை பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைத்து, அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும். இந்தச் செயலுக்கு நளின் தெல்கொடவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேறெந்த காரணங்களும் எனக்கு பொருந்தாது. மக்கள் விடுதலை முன்னணி 1988-90 காலத்தில் செய்த பயங்கரவாத செயல்பாடுகள் பல தொடர்பில் முடிவுரை அவதானிப்புகளில் காட்டப்பட்டுள்ளன. அதன் பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம் ஜே.வி.பி. செய்த கொடூரமான பயங்கரவாத செயல்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது. முழு வரலாறும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, வேறு எந்த குற்றச்சாட்டுகளும் எனக்கு பொருந்தாது. அந்த அறிக்கையை நான் முற்றிலும் நிராகரிக்கிறேன்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மறைத்ததாக யாரும் குற்றம் சாட்ட முடியாது. அது 2000 ஆண்டு பாராளுமன்றக் கூட்டத்தொடர் அறிக்கையாக இருந்தது. எனினும், யாரும் அது தொடர்பாக விவாதம் நடத்துமாறு கோரவில்லை. குறைந்தது மக்கள் விடுதலை முன்னணியும் கோரவில்லை. பெரும்பாலானவர்கள் அறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவே, பாராளுமன்றத்தில் அதைப் பற்றி விவாதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நாம் நம்பலாம்.

இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசியல் கட்சியும் இந்த அறிக்கையின் மூலம் குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெற முயன்றதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பாராளுமன்றக் கூட்டத்தொடர் அறிக்கையை விவாதிக்கும் பாரம்பரியம் இந்த நாட்டிலோ அல்லது பிற பாராளுமன்றங்களிலோ இல்லை என்றார்.

## “இந்து சமுத்திரமே பாலைவனம் ஆகிவிடும்”

அமைச்சர் கச்சத்தீவில் தமிழக மீனவர்களைச் சந்தித்து இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினார். இராமேஸ்வரத்தின் அனைத்து மீனவ கூட்டமைப்பின் தலைவர் ஜேசுராஜ் மற்றும் சங்க உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை, தமிழ் நாட்டு மீனவர் பிரச்சினை என்பது நீண்டகாலமாக நிலவும் பிரச்சினை. இதற்கான தீர்வு தொடர்பில் நீண்டகாலமாகக் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

இந்திய மீனவர்களைக் கைது செய்ய வேண்டும், சிறையில் அடைக்க வேண்டும் என நாம் நினைக்கவில்லை. அதற்கான தேவைப்பாடும் எமக்கு கிடையாது. எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவதாலும், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமையை கடைப்பிடிப்பதால் கைது செய்யப்படுகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் இன்னும் மீண்டு எழ வில்லை. இந்நிலையில், தமிழக மீனவர்கள் அவர்களின் வளங்களை அழிக்க முற்படுவது ஏற்புடையது அல்ல" என்றார்.

## சா/த பரீட்சை இன்று ஆரம்பம்

இந்த பரீட்சை 3,663 மையங்களில் பரீட்சை நடைபெறும். இந்தப் பரீட்சைக்கு 478,182 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். அவர்களில் 398,182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர் என்றும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பரீட்சை நிலையங்களைச் சுற்றி சிறப்பு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## “5ஆண்டுகள் பரீட்சை தடை”

“பரீட்சை எழுதத் தேவையான பேனா, பென்சில் போன்ற பொருட்களை நீங்கள் பரீட்சை மத்திய நிலையத்துக்கு கொண்டு வரலாம்.” வேறு எதையும் உன்னுடன் எடுத்துச் செல்ல முடியாது. தேவைப்பட்டால், தண்ணீர் குடிக்க ஒரு தண்ணீர் போத்தலை எடுத்துச் செல்லலாம். அதைத் தவிர, நீங்கள் வேறு எதையும் எடுத்துவர தேவையில்லை. குறிப்பாக, சில பொருட்களை எடுத்துச் செல்வது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மொபைல் போன்கள், ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள் மற்றும் மொபைல் போன்களுடன் பயன்படுத்தக்கூடிய எந்தவொரு தகவல் தொடர்பு மற்றும் மின்னணு சாதனங்களையும் பரீட்சை மத்திய நிலையத்துக்குள் கொண்டு வரக்கூடாது. அவை முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

உங்களிடம் மொபைல் போன் அல்லது தொடர்புடைய தகவல் தொடர்பு சாதனம் இருந்தால், பரீட்சையின் போது அதற்கு எதிராக நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுப்போம். நாங்கள் சட்டத்திற்குள் செயல்படுகிறோம். “அடுத்த 5 ஆண்டுகளுக்கு பரீட்சைக்கு தடை விதிக்கக்கூடிய ஒரு குற்றமாக, நான் அதை குறிப்பாக பரிசீலித்து வருகிறேன்.”

## 51 குடும்பங்களுக்கு ஆகஸ்டில் வீடுகள்

அவர்கள், பூனாகலை மாகந்த தேயிலை தொழிற்சாலையில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள்.

எனினும், கடந்த இரண்டு வருட காலமாகத் தேயிலை தொழிற்சாலையில் வாழ்ந்து வந்தனர்.

அந்த 51 குடும்பங்களுக்கு 10பேர்ச் காணியில் நிரந்தரமான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் சனிக்கிழமை (15) நாட்டப்பட்டது. பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதில், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கே.வி சமந்த வித்யாரத்ன பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிட்ணன் செல்வராஜ், அம்பிகா சாமுவேல்,

ஊவா மாகாண ஆளுநர் சட்டத்தரணி கபில விஜயசேகர, அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்தன கீர்த்தி, நிர்வாகப் பிரிவின் மேலதிக செயலாளர் தீப்தி குணரத்ன, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் வசந்த ரொட்ரிகோ, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் காமினி மஹகமகே. உட்பட பலரும் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தனர்.

10 பேர்ச் காணியுடன் இவ் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஒரு வீட்டுக்கு சுமார் 28 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது. அந்த வீடுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அளவில் பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கு தமிழர் கூட்டமைப்பு உதயம்

பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினரும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திடும் நிகழ்வு மட்டக்களப்பு ரிவேரா விடுதியில் சனிக்கிழமை (15) இடம் பெற்றது.

இந்த ஒற்றுமைக்கான பயணத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அரசியல் சக்திகள் அனைவரையும் ஒன்றிணைத்துப் போட்டியிட உள்ளதோடு, எதிர்காலத்தில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளையும் சிவில் சமூக ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து அதனூடாக எதிர்காலத்தில் கிழக்கு தமிழர்களின் அரசியல், சமூக பாதுகாப்பு அரணாக பலம் பொருந்திய கட்டமைப்பாக இது செயல்படவுள்ளது என தெரிவித்தனர்.

## “மரணிக்கும் நிலையில் தமிழரசுக் கட்சி”

யாழ். ஊடக அமையத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“தமிழரசுக் கட்சியில் தற்போது எவரும் நிலையாக இருக்க விரும்ப மாட்டார்கள். குறிப்பாக அங்கு பெண்கள் மதிக்கப்படுவதில்லை தேர்தலில் முக்கிய இடம் கொடுப்பதும் இல்லை.

அதேநேரம், தமது கட்சியை உடைக்க சதி செய்யப்படுகிறது என்று கூறும் தற்போதைய பதில் தலைவர் சிவஞானம் கட்சிக்குள்ளேயே அதை தேட வேண்டும்.

அதை விடுத்து வெளியில் இவ்வாறு கூறுவது வேடிக்கையாக உள்ளது” என்றார்.

குறிப்பாக, பதவிக்கும், அதிகாரங்களுக்கும், குற்றங்களை மறைக்கும் கும்பலே அந்த கட்சியில் தற்போது இருக்கின்றனர். அத்தகைய நிலையில் இருக்கும் கட்சிக்கு யார் தலைவராக இருந்தாலும் பொம்மைகளாகவே இருப்பர் என்றும் கூறியுள்ளார்.

“இவ்வாறான போக்கு தொடரும் நிலையில் அந்த கட்சியின் உறுப்புரிமையை விலக்கிக் கொண்டு, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இந்த கூட்டணியில் இணைந்துள்ளது. இந்த இணைப்பின் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வர நாம் முயற்சிக்கிறோம். அந்த வகையில் பெண்களின் வலிமையை வெளிக்கொண்டுவரும் சந்தர்ப்பமாக வரும் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலைப் பெண்கள் பார்க்க வேண்டும்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## “மு.கா. தேசிய பட்டியல் சுழலும்”

மாறாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முக்கியமாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தங்களது பிரதேசத்துக்குக் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தமது சபைகளைக் கைப்பற்றி ஆட்சியை அமைக்க வேண்டும். அதற்கான சகல எற்பாடுகளையும் செய்து பணியாற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் ஒரு வருடத்துக்கு ஒருவர் என்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படும். இதனைக் கட்சி தீர்மானித்துள்ளது. அந்த வகையில் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்கள், உயர் பீட உறுப்பினர்கள் தங்களது சபைகளை வெல்ல வைத்தால் கட்சி உங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் தந்து உங்களையும் உங்களது பிரதேசத்தையும் கௌரவப்படுத்தும் எனவும் தெரிவித்தார்

## குடிபோதையில் தள்ளாடியவருக்கு சிக்கல்

■ சுமனசிறி குணதிலக்க

பிபில சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சொந்தமான மெதகம பக்கினிகஹவெல சுகாதார நிலையத்திற்கு குடிபோதையில் வந்து குழப்பத்தை ஏற்படுத்திய நபர் ஒருவர் மெதகம பொலிஸாரால் சனிக்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் மனைவி குழந்தையின் எடையை அளவிட வந்த நிலையில் வீடு திரும்புவதற்கு தாமதம் ஏற்பட்டதால், இந்த நபர் வந்து அங்கிருந்தவர்களைக் கடுமையான வார்த்தைகளால் திட்டி, அநாகரீகமாகவும், இடையூறாகவும் நடந்து கொண்டுள்ளார்.

இது குறித்து தாய்மார்கள் 119 அவசர அழைப்பு பிரிவுக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குடும்ப சுகாதார சேவைகள் அதிகாரி உட்பட அங்கு இருந்தவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்று சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

பின்னர் குறித்த நபர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 18 ஆம் திகதி பிபில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பணிப்பெண்களிடம் சேஷ்டை; பயணி கைது

■ டி.கே.ஜி.கபில

சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் இரண்டு விமான பணிப்பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகக் கூறப்படும் பயணி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (16) அன்று கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சேஷ்டையில் ஈபட்டவர், அதுருகிரிய பகுதியில் வசித்து வரும் 38 வயதுடையவராவார். அத்துடன் அவர், அந்தப் பகுதியில் ஒரு கடையை நடத்தி வருகின்றவர் என தெரிய வந்துள்ளது.

அவர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL-309 மூலம் சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சனிக்கிழமை (15) இரவு 10.00 மணிக்கு வந்தடைந்தார்.

விமானம் வந்து சேரும் போது, அதிக குடிபோதையில் இருந்த விமானத்தில் பணிபுரியும் இரண்டு விமானப் பணிப்பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியுள்ளார்.

இரண்டு விமானப் பணிப்பெண்களும் உடனடியாக இந்த சம்பவத்தை விமானத்தின் விமானியிடம் தெரிவித்துள்ளனர்.

அவர் இந்த சம்பவம் குறித்து கட்டுநாயக்க விமான நிலைய விமானப் பணிப்பெண் மையத்திற்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன்படி, விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பாதுகாப்பு அதிகாரிகள் அவரைக் கைது செய்து கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## பெண்கள் தினத்தை

# “வருடம் முழுவதும் கொண்டாட வேண்டும்”

■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்

பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதற்கு ஒரு நாள் போதாது. அவர்களை சிறப்பிப்பதாயின், வருடம் முழுவதும் பெண்கள் தினத்தை அனுஷ்டித்து அவர்களை மகிமைப்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர தெரிவித்தார்.

இந்தச் செய்தியை நான் தமிழிலும் கூறி அதனைத் தமிழ் பேசுவோரிடத்திலும் கொண்டு சேர்க்க விரும்புகின்றேன் என்றும் அவர் வலியுறுத்தித் தொடர்ந்து தமிழிலேயே பேசினார்.

“நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக வலுவான பெண் வழித்தடமாக இருப்பாள்" எனும் இவ்வருட சர்வதேச மகளிர் தின தொனிப்பொருளில் அமைந்த இந்த நிகழ்வு திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் முழுமையான




அமுலாக்கத்துடன் இடம்பெற்றது.

சுமார் 250 பேருக்கு மேற்பட்ட பெண் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தொழில் முனைவோராகத் திகழும் 25 பெண்கள் ஆளுநர், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், துறைசார்ந்த அதிகாரிகளால் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி பாராட்டப்பட்டார்கள்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர,

தாயாக, சகோதரியாக, மனைவியாக என பல பாத்திரங்களில் இந்த உலகை உயிர்ப்பூட்டும் பெண்களைத் தினமும் கண்ணியப்படுத்துவதுதான் சரியாக இருக்கும். பெண்களுக்கு உள்ள வளங்கள், அவர்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புக்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன.

பெண்களுக்கு உயர் கண்ணியத்தையும், மதிப்பு, மரியாதையும் வழங்க வேண்டும் என்றால் அதனை நாங்கள் எமது வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். பின்னர் அது வியாபித்து பாடசாலை, பணியிடம், பள்ளிவாசல், பன்சலை, கோவில், விகாரை, தேவாலயம் என்று அவைகளும் பெண்களைக் கண்ணியப்படுத்தும் இடங்களாக மாற வேண்டும். இதனைத் காலம் தாழ்த்தாது அமுல் படுத்த வேண்டும்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலும் பெண்களின் கல்வித் தரம், அவர்களது நிபுணத்துவ மனித வளம் மேம்பட்டிருக்கிறது.

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் சகல பீடங்களிலும் கற்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை மெச்சிப் பேசுமளவிற்கு அதிகரித்திருக்கிறது. நாட்டின் சனத்தொகையிலும் பெண்கள் 52 வீதம் உள்ளார்கள்.

முன்னர் நாங்கள் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித் தருவது தேயிலை, றப்பர், கோப்பி என்றுதான் சொன்னோம். ஆனால் அந்த நிலைமை மாறி இப்பொழுது நாட்டிற்று டொலர் அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவது நம் நாட்டுப் பெண்களே என்றாகியிருக்கிறது. இவ்வாறு பெண்கள் எல்லா வகையிலும் தமது அர்ப்பணிப்பைச் செய்து வருகிறார்கள். நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு அவர்களே. எனவே அத்தகைய அப்பணிப்பாளர்களைக் கௌரவிப்பதில் வருடத்தில் ஒரு நாள் போதாது” என்றார்.







# மீண்டும் மழை; போக்குவரத்து பாதிப்பு

■ வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) காலை முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக தாழ்நிலை பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக வாழச்சேனை, கிரான், செங்கலடி, வெல்லாவெளி, போன்ற தாழ்நிலை பகுதிகளில் மழைநீர் காணப்பட்ட போதிலும் ஞாயிற்றுக்கிழமை பெய்த மழை காரணமாக தாழ்நிலைப் பிரதேசங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ள.

இதேவேளை கிரான், வாகரை, செங்கலடி, போன்ற பகுதிகளில் மக்கள் போக்குவரத்து செய்யும் பிரதான பாதைகள் ஊடாக வெள்ள நீர் தேங்கி காணப்படுவதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கிரான் பகுதியில் கோரகல்லிமாடு, புலிபாய்ந்தகல், போன்ற பகுதிகளைச் சேர்ந்த அங்குள்ள மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. இப்பகுதி இராணுவத்தினரின் உதவியுடன் பிரதேச செயலகத்தினால் படகுச் சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் பல ஏக்கர் காணிகளில் தற்போது சிறு போக வேளாண்மை செய்கை ஆரம்பக்கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் இப்பகுதியில் செல்லும் விவசாயிகள் பொதுமக்கள் நோயாளிகள் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை படுவாங்கரைப் பகுதியில் சிறு போக வேளாண்மை செய்கைக்குத் தயாராகி இருந்த நெற் காணிகளும் தற்போது வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.





# நகைகளை திருடிய மூவர் கைது




■ எஸ்.ஆர்.லெம்பெட்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மன்னார் பொலிஸாரால் சனிக்கிழமை(15) மீட்கப்பட்டதுடன் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தது.

திக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், மன்னார் பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 28 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த 28,29 மற்றும் 33 வயதுடைய நபர்கள் என தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வாகன விபத்தில் மௌலவி பலி

■ கனகராசா சரவணன், ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, கல்லடி பாலத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) காலை பேருந்து ஒன்று, மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதில் மௌலவி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி முகைதீன் பள்ளிவாசல் மௌலவியான 43 வயதுடைய சபீஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடி நகரை நோக்கிப் பயணித்த பேருந்து கல்லடிப்பால சந்தியில் வைத்து எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் காத்தான்குடி முகைதீன் பள்ளிவாசல் மௌலவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில்,

மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சுமார் 4.5 ரூபாய் மில்லியன் மதிப்புள்ள, சிகரெட்டுகளை நாட்டிற்குள் கொண்டு வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற பயணி ஒருவர் சனிக்கிழமை (15) காலை விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கடவத்தை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரின் பயணப் பையில் இருந்து 30,000 வெளிநாட்டுத் தயாரிப்பு ‘பிளாட்டினம்’ சிகரெட்டுகள் அடங்கிய



150 சிகரெட் அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “ஐ லவ் யூ” கூறிய மாணவன்; அதிபர் மீது முறைப்பாடு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு, தனது காதலைத் தெரிவித்த அதே வகுப்பில் கல்வி கற்கும் சக மாணவனை அதிபர் பிரம்பால் கண்டித்ததையடுத்து, மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், வெள்ளிக்கிழமை (14) அன்று குறித்த அதிபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலவன் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்று வரும் மாணவி ஒருவரைப் பார்த்து அதே வகுப்பில் கல்வி கற்று வரும் மாணவன் ‘ஐ லவ் யூ’ என கூறி தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக குறித்த மாணவி பாடசாலை அதிபரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து, அதிபர் அந்த மாணவனை தனது காரியாலயத்துக்கு வரவழைத்து பிரம்பால் அடித்து எச்சரித்து அனுப்பியுள்ளார்.

பின்னர் வீட்டிற்குச் சென்ற மாணவன், அதிபர் தன்னை தாக்கியதாக தெரிவித்ததையடுத்து, மாணவனின் பெற்றோர் அவரை மட்டு.போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், அதிபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முருக்கனில் சிக்கிய விநாயகர்

மன்னாரில் இருந்து கொழும்புக்கு பேருந்தில் பயணித்த 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவர், மக்காச்சோளப் பையில் மறைத்து வைக்கப்பட்டு விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்ட பெறுமதியான விநாயகர் சிலையை முருக்கன் பகுதியில் சனிக்கிழமை (15) கைது செய்ததாக முருக்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இந்த விநாயகர் சிலையை மக்காச்சோளம் நிரப்பப்பட்ட பையில் கவனமாக மறைத்து வைத்து கொழும்பு பகுதிக்கு விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்றதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சிலை தங்கமா என்பதை சரிபார்க்க சந்தேக நபர் சிலையின் மூக்கு மற்றும் கைகளை உடைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரிடம் மேலும் விசாரித்தபோது, அவர் தனது மாமாவிடமிருந்து சிலையைப் பெற்றதாகக் கூறினார்.

# விலங்குகள் கணக்கெடுப்பை தொடர்ச்சியாக நடத்த வேண்டும்

2025 மார்ச் 15ஆம் திகதியன்று காலை 8.00 மணி முதல் 8.05 மணி வரை 5 நிமிடங்கள் முன்னெடுக்கப்பட்ட விலங்குகள் கணக்கெடுப்பு, இலங்கை வரலாற்றில் அதிக கவனத்தை ஈர்த்திருந்தன. விவசாய நிலங்களுக்கு வருகை தரும் குரங்குகள், செங்குரங்குகள், மர அணில்கள் மற்றும் மயில்கள் போன்ற வனவிலங்குகள் மட்டுமே கணக்கெடுக்கப்பட்டன.

இலங்கையில் வனவிலங்குகள் நாட்டில் அழிவை ஏற்படுத்தி வருகின்றன. இதற்குக் காரணம், மனிதர்கள் காட்டு விலங்குகளின் நிலத்தைக் கைப்பற்றி, அங்கு குடியிருப்புகளையும் விவசாய நிலங்களையும் நிறுவியுள்ளனர். எனவே, விவசாய நிலங்களுக்குள் ஓடி மரங்களையும் இலைகளையும் சாப்பிடுவதற்கு விலங்குகளைக் குறை கூற முடியாது.

யானைகளைக் கொல்வதாலோ, மயில்களைச் சுடுவதாலோ, குரங்குகளை அடித்து விரட்டுவதாலோ இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த முடியாது. இந்த சூழ்நிலையை கட்டுப்படுத்த அரசாங்கம் என்ன திட்டத்தை செயல்படுத்துகிறது என்பதும் எங்களுக்குத் தெரியாது. ஆனால் இந்த கட்டத்தில், இந்த கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

நீங்கள் ஏதாவது ஒன்றின் பல மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை எண்ணி, இறுதி முடிவைப் பெறலாம். இது 100% துல்லியமான முடிவு அல்ல, ஆனால் ஓரளவிற்கு துல்லியமான முடிவு. ஒரு நாளொன்றில், ஒரு மணி நேரத்திற்குள், அல்லது 5 நிமிடங்களுக்கு, எத்தனை முறை காட்டு விலங்குகள் விவசாய நிலத்திற்குள் நுழைகின்றன என்பதைக் கண்டறிய முடியும்.

இங்கு முக்கியமானது காட்டு விலங்குகளின் எண்ணிக்கை அல்ல, ஆனால் அவை எத்தனை முறை விவசாய நிலத்திற்குள் நுழைகின்றன என்பதுதான். ஒவ்வொரு முறையும், இந்த விலங்குகள் விவசாய நிலத்திற்கு ஏதாவது ஒரு வகையான சேதத்தை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில், 24 மணி நேரத்திற்குள் விவசாய நிலங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை சராசரியாகக் கணக்கிட முடியும்.

அதைத் தவிர, இந்த நாட்டில் எத்தனை குரங்குகள், எத்தனை செங்குரங்குகள், எத்தனை மர அணில்கள் மற்றும் எத்தனை மயில்கள் உள்ளன என்பதைக் கணக்கிட முடியாது. விவசாய நிலங்களுக்கு சேதங்களை விளைவிக்கும் விலங்குகளை ஓரளவுக்கு எண்ணி கணக்கெடுத்து, அவற்றிலிருந்து ஏற்படும் சேதங்களை மதிப்பிடமுடியும். அதன்பின்னர், அவ்வாறான விலங்குகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கத்தால் எடுக்கமுடியும்.

தற்போது பாடசாலை விடுமுறை காலம், ஆகையால், தங்களுடைய வீட்டுத்தோட்டங்களுக்கு வரும் விலங்குகள், பறவைகளை கணக்கிட்டு, அதனை, அந்தந்த பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம சேவகர்கள் ஊடாக சேகரித்து, பிரதேச செயலங்களுக்கள் பெற்றுக்கொள்ளுமாயின், ஒரு பொதுவான தகவல்களை அரசாங்கத்தால் மிகவும் துரித கதியில் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதே எமது அறிவுறுத்தலாகும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களை காது கொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளை சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப்பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானது என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனதை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

பருத்தியூர் பால.வயிரவநாதன்


## கடிதங்கள்

### அடையாள கற்சுவரை அமைக்க வேண்டும்

உக்குவளை நகரிலிருந்து எல்கடுவ, வத்தேகம, மாத்தளை, வெஹிகல, கலல்பிட்டிய ஆகிய இடங்களுக்கு செல்வதற்கான இடங்களைக் குறிக்கும் பழைமைமிக்க அடையாள சுற்றுவட்ட கற்சுவரொன்று (Roundabout) உக்குவளை நகர மத்தியில் இருந்தது. இதனால் தூர பிரதேசங்களில் இருந்து வருவோருக்கு தாம் போக வேண்டிய இடங்களை மிக இலகுவாக கண்டறிந்து செல்ல கூடியதாக இருந்தது.

சமீபத்தில் இச்சுவர் வீதி அதிகாரசபையினால் உடைத்து அகற்றப்பட்டதால் பயணிகள் தாம் போக வேண்டிய இடங்களை உக்குவளையிலுள்ளவர்களிடம் அல்லது வர்த்தகர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மீண்டும் இடங்களைக் குறிப்பிட்ட அடையாள கற்சுவரை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஏ.எம்.ஜலீல்



# இலக்குகள் வாக்குறுதியாகி காணாமல் போதல்

லக்ஸ்மன்

நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சி பீடத்துக்கு ஏற்றியதாகவும் ஆனால், அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் அரசு நகர்ந்து வருவதாகக் கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆதங்கம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அதே நேரத்தில், அரசாங்கத்திற்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத குழுக்கள் இருப்பதாக வெளியாகியிருக்கும் தகவல் குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்தச் செய்தி, பொது மக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்புவதற்காக செய்யப்படும் ஒரு சித்திரிக்கப்பட்ட நடவடிக்கையாகவே தோன்றுகிறது. விசாரணை செய்ய வேண்டுமாக இருந்தால், அரசாங்கம் நேரடியாக விசாரணை செய்ய வேண்டும். அதனை விடுத்து, தவறான செய்தியை சித்திரித்து ஒட்டுமொத்த சமூகத்தையும் அவமானப்படுத்தக் கூடாது என்றிருக்கிறார்.

இவர்கள் இருவரும் பிரதானப்படுத்தியிருப்பது அல்லது இந்த இரண்டு விடயங்களும் இணைக்கப்பட்டிருப்பது ஒரே விடயமில்லையென்றாலும் ஒரு இணைப்பைக் கொண்டதாகும். அதாவது 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடங்கிவைக்கப்பட்டது. அவர்களுடைய கருத்துக்கள் சரியா இல்லையா என்பது குறித்து நாம் ஆராயத் தேவையில்லை.

இருந்தாலும், சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை, ஊடகவியலாளர்களான பிரதீப் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயர் தாக்கப்பட்டமை என நீளும் பட்டியல் குறித்து பேராயர் கருத்து வெளியிட்டிருக்கிறார். வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஜீ.நடேசன், டி.சிவராம் உள்ளிட்ட 40ஐத் தாண்டிய பெரும் பட்டியலும் இருக்கிறது. ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் போன்றவற்றிற்கு நீதியைக் கோருவது முக்கியமானது. அதற்குள் ஓரவஞ்சனையான முனைப்புகள் தவிர்க்கப்படுவது நல்லதாக இருக்கும்.

இவ்வருடத்தின் ஏப்ரல் 21 உடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று ஆண்டு நிறைவடைகிறது. இன்னமும் இத் தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படவோ, தண்டனைக்கு உட்படுத்தப்படவோ இல்லை. அந்தவகையில் கர்தினாலுடைய ஆதங்களம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக் கொடுப்பதற்கானதே ஆகும். இது ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் ஒரு வாக்குறுதியை இணைப்பாகக் கொண்டது. இது தவிர இன்னும் பல இருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னரே முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் இலங்கையின் கிழக்கு உள்ளிட்ட பல இடங்களிலும் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், 2019 ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னரே அது பலமான வெளிப்படுத்தலுடன் உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் பல இஸ்லாமிய அமைப்புகள் தடை செய்யப்பட்டன. அந்த அமைப்புகளுடன் தொடர்புபட்ட பலர் கைது செய்யப்பட்டனர். வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. இருந்தாலும் 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் யாருடைய அறிவுறுத்தலில் நடத்தப்பட்டது. என்பதும் அதன் ஊடாக யாரையெல்லாம் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இலக்குக்கு உட்படுத்துகிறார்கள் என்பதும் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்ததே.

1978இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு ஒரு நபர் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தன் வசம் வைத்திருப்பதற்கான சட்டமாக இருந்துவருகிறது. இதற்கு அரசியல் தலைவர்களே காரணமாகும். இந்த அரசியல் தலைவர்களின் பட்டியலை இல்லாமல் ஆக்குவதற்காக இந்த அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கொண்டால், நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை எடுத்த எடுப்பிலேயே மாற்றியமைத்துவிட முடியுமா என்பது கேள்விக்குறியே. ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை, ஊடகவியலாளர்கள் காணாமலாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை, இப்போது தொடர்கின்ற நெருக்கடிகளுக்குத் தீர்வு அரசியல்வாதிகளை மாற்றிவிடுவதால் ஏற்பட்டுவிடுமா என்பதும் கேள்விதான்.

இந்த நிலையில்தான் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வெளிக்கிளப்பப்படுகின்ற தீவிரவாதம் தொடர்பான கருத்துக்கள் நாட்டில் சட்டம் ஒழுங்கை எவ்வாறு சீர்குலைக்கிறது. மக்கள் மத்தியில் எழுகின்ற குழப்பகரமான மனோநிலைகள் காரணமாக உருவாகுகின்ற தேவையற்ற குழப்பங்கள் பற்றிச் சிந்திக்கவேண்டியிருக்கிறது. கடந்த பல தசாப்தங்களாக இருந்து வந்து கொண்டிருந்த பல்வேறு குழப்பங்களுக்கு மேலதிகமாகவே இப்போது கொலைகளின் அதிகரிப்பு, வன்முறைச் சம்பவங்கள் இணைந்து கொண்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த 2009ஆம் ஆண்டு வரை நாட்டுக்குள் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களோ, கொலைகளோ, குண்டுத் தாக்குதல்களோ நடைபெறுகின்ற வேளைகளில் இனந்தெரியாதோர் என்ற ஒன்றுடன் சம்பவத்தினை இணைத்து விடுவது வழக்கம். அவ்வேளைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அந்த விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெறுவதும் வழக்கமாகும். இப்போதும் அவ்வாறானவர்கள் பலர் அரசியல் கைதிகளாக சிறைகளில் அடைந்து கிடக்கின்றனர் என்பதும் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து தொடர்ச்சியாகத் தமிழ் அரசியல்வாதிகள் அரசுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்பதும் இதன் மறுபக்கமாகும்.

ஆனால், அதன் பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019இல் நடைபெற்ற வேளை நேரடியாக இஸ்லாமிய அமைப்புகள் இலக்கு வைக்கப்பட்டன. ஆனால், ஆறு வருடங்களாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை எனபதே இந்த இடத்தில் பிரச்சினைக்குரியது.

அதே நேரத்தில், இவ்வருடத்தில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் அடுத்த ஆண்டு நினைவுக்கான வேளை நெருங்குகையில் மீண்டும் ஒரு குழப்பகரமான சூழலை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் முனைவது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஒருபக்கம் கர்தினால் அரசாங்கத்தை நெருக்குதலுக்குட்படுத்த ஆரம்பிக்கிறார். பாதுகாப்புத் தரப்பினர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் தீவிரவாதக் குழுக்கள் காணப்படுகின்றன என்ற தகவலை வெளியிடுகின்றனர். இதில் பாதுகாப்புத் தரப்பினரின் இயலாமை வெளிபடுவதாகவும் கொள்ள முடியும்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் கிழக்கில் தீவிரவாதக் குழுக்கள் என்ற எண்ணக்கருவை உருவாக்கி இருப்பது கவலைக்குரிய விடயமாகவே பார்க்கப்படுகிறது. இந்தத் தகவல் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நாட்டுக்குள் பதற்றமான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மறைப்பதற்கில்லை. இது நாட்டுக்குள் நல்லிணக்கம் ஏற்படுவதைச் சீர்குலைக்கும் என்றே சொல்ல வேண்டும். அந்த வகையில் அரசாங்கம் பார்த்தும் பாராதவாறான நடைமுறையைக் கையாள்வது அதனை ஏற்றுக் கொண்டதாகவே இருக்கும் என்பது இந்த இடத்தில் நினைவுபடுத்தப்பட வேண்டும். அமைதியாக மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்களைப் பொதுவெளியில் ஊடகங்களுக்கூடாக வெளிப்படுத்த முனைவதானது தவறான புரிதலை ஏற்படுத்தும் தேவையற்ற விபரீதங்களைக் கொண்டுவரும் என்பதற்கு இது நல்லதொரு உதாரணமாகும்.

நாட்டில் உள்ள சட்டங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பது, விசாரணைகளை மேற்கொள்வது சரியான ஆதாரங்கள் இருக்கின்ற போது, தண்டனைக்குட்படுத்துவதே சிறந்த முறையாக இருக்கும். அல்லாது போனால் வீணான விபரீதங்கள் தோன்றிவிடும் என்பது பாதுகாப்புத் தரப்பினருக்குத் தெரிந்திருத்தலே நல்லதாகும்.

இந்த இடத்தில் தான், அரசாங்கம் தேசியப் பாதுகாப்பில் சட்டம் ஒழுங்கை தவறவிட்டுள்ளது என்பதும், சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கான வேலைப்பாடுகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை என்பதும் வெளிப்படுகிறது. இது தேசியப் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்கு உறுதியளிக்க வேண்டிய தேவைப்பாட்டை உருவாக்குகிறது என்றே சொல்லாம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லையென்றாலும் பொது மக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்புவது தவறென்பதே முக்கியம்.

மொத்தத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றியதும் அதனை முதன்மையாகக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணியைத் தலைமையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியதும் நடந்திருக்கிறது.

என்றாலும், இன்னமும் முடிவுக்குவரா உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் முடியும் வரையில் இன்னும் பல விபரீதங்களும் நடைபெறத்தான் செய்யும்.

இலக்குகளும் வாக்குறுதிகளும் திசைதிருப்பல்களும் இதய சுத்தியுடனானதாக இல்லாமல் போனால் அவை வீணே என்பது மாத்திரமே நிச்சயம்.

ஜப்பானில் பணிபுரிய வாய்ப்பு

# இம்மாதம் வணிக திறன் தேர்வு



இலங்கையில் ஒடோமொபைல் போக்குவரத்து வணிகத் துறையில் இந்த மாதம் புதிய திறன் தேர்வை அறிமுகப்படுத்தியுள்ளதாக ஜப்பான் தூதரகம் அறிவித்துள்ளது. இந்தத் தேர்வு, குறிப்பிட்ட திறமையான தொழிலாளர்கள் (SSW) திட்டத்தின் கீழ் ஜப்பானில் வேலை தேடும் நபர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இந்த சேர்க்கையுடன், செவிலியர் பராமரிப்பு, உணவு சேவை, விவசாயம், கட்டுமானம், விமான நிலைய தரை கையாளுதல், தங்குமிடத் தொழில் மற்றும் கட்டிட சுத்தம் செய்தல் உள்ளிட்ட எட்டு துறைகளில் திறன் சோதனைகள் கிடைக்கின்றன.

ஒடோமொபைல் போக்குவரத்து வணிகத் துறை மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது, லொறி ஓட்டுனர், டெக்ஸி ஓட்டுனர் மற்றும் பேருந்து ஓட்டுநர். இந்தத் துறையில் வேலைக்குத் தகுதி பெற, விண்ணப்பதாரர்கள் திறன் தேர்வு மற்றும் ஜப்பானிய மொழித் திறன் தேர்வு இரண்டிலும் தேர்ச்சி பெற வேண்டும். லொறி ஓட்டுனர்களுக்கு N4 ஆகவும், டெக்ஸி மற்றும் பேருந்து ஓட்டுனர்களுக்கு N3 ஆகவும் மொழித் திறன் தேவைப்படுகிறது.

ஜப்பானில் பணிபுரிய இந்த புதிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள பல திறமையான மற்றும் ஆர்வமுள்ள இலங்கையர்கள் வருவார்கள் என்று ஜப்பான் தூதரகம் நம்புகிறது.2024ஆம் ஆண்டு தொடங்கி ஐந்து வருட காலப்பகுதியில் ஒடோமொபைல் போக்குவரத்து வணிகத் துறை 24,500 வெளிநாட்டு தொழிலாளர்களை வரவேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இலங்கையின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீடித்த நட்பை வலுப்படுத்துவதற்கும் தூதரகம் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது.

பெருமளவு இலாபத்துடன்

# 2024 நிதியாண்டை நிறைவு செய்தது SLT குழுமம்

2024 டிசெம்பர் மாத நிறைவில் SLT குழுமம்இலாபகரத்தன்மையில் பெரும் அதிகரிப்பு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. உறுதியான தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் நிலையான மற்றும் மொபைல் பிரிவுகளில் வெற்றிகரமான செலவு மேம்படுத்தல்கள் போன்றவற்றுடன், வருடம் முழுவதிலும் மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை இந்த பெறுபேறுகளில் பாரிய பங்களிப்பு செலுத்தியிருந்ததாக அறிவித்துள்ளது.



2024இல் குழுமம் ரூ.3.1 பில்லியனை வரிக்கு பிந்திய இலாபமாக (PAT) பதிவு செய்திருந்தது, 2023ஆம் ஆண்டில் ரூ.3.9 பில்லியன் நட்டமாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனூடாக ரூ. 7 பில்லியன் எனும் பாரிய வருமான அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. 2024 ஆம் ஆண்டில் குழுமத்தின் வருடாந்த வருமானம் 4.4%இனால் அதிகரித்து ரூ. 111.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய இலாபம் 19.6% இனால் உயர்ந்து ரூ.46.1 பில்லியனாக பதிவாகியிருந்தது.

செயற்பாட்டு வினைத்திறனில் குழுமம் மேலதிக கவனம் செலுத்தியிருந்ததனூடாக, செயற்பாட்டு செலவுகள் 4% குறைந்து ரூ.71.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது EBITDAஇல் 23.7% முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கி அந்தப் பெறுமதியை ரூ. 40 பில்லியனாக பதிவு செய்திருந்தது. அதுபோன்று, செயற்பாட்டு இலாபம் 172.8% எனும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எய்தி ரூ.11.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. நிதிசார் செலவுகளும் 20.5%இனால் குறைந்து ரூ.9 பில்லியனாக பதிவாகி, குழுமத்தின் சிறந்த பெறுபேற்றுக்கு பங்களிப்பு செய்திருந்தது.

நான்காம் காலாண்டில் SLT குழுமம் உறுதியான நிதிசார் செயற்திறனுடன், சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. வருமானம் ரூ.29.1 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2023 நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.9% வளர்ச்சியாகும். 2024 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 1.8% வளர்ச்சியாகவும் அமைந்திருந்தது. கடைசி காலாண்டில் குழுமத்தின் பிரதான குறிகாட்டிகளில் முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. குழுமத்தின் தேறிய இலாபம் ரூ.12.9 பில்லியனாக உயர்ந்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 50% வளர்ச்சியாகும். 28.9% EBITDA வளர்ச்சி பதிவாகி, ரூ.11.5 பில்லியனாக காணப்பட்டது. தொழிற்பாட்டு இலாபம் இரண்டு மடங்கிற்கு மேலாக உயர்ந்து ரூ.4 பில்லியனாக காணப்பட்டது.

2024இன் நான்காம் காலாண்டில் SLT குழுமம் ரூ. 2.4 பில்லியன் எனும் குறிப்பிடத்தக்களவு வரிக்கு பிந்திய இலாபத்தை பதிவு செய்திருந்தது. மூன்றாம் காலாண்டில் பதிவாகிய ரூ.1.1 பில்லியன் என்பதுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். அத்துடன் 2023 நான்காம் காலாண்டில் பதிவாகிய ரூ.1.2 பில்லியன் இழப்புடன் ஒப்பிடுகையில் அபார திருப்பமாக அமைந்திருந்தது. காலாண்டு பெறுபேறுகள், ஆண்டை உறுதியாக நிறைவு செய்வதில் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்ததுடன், குழுமத்தின் மூலோபாய செயற்பாடுகளின் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் செலவு நிர்வாகம் போன்றவற்றின் வெற்றிகரத்தன்மையையும் வெளிப்படுத்தியிருந்தன.

அரசாங்க வருமானங்களில் SLT குழுமம் பிரதான பங்களிப்பாளராக திகழ்ந்தது. ரூ.31.5 பில்லியனை இலங்கை அரசாங்கத்துக்கு (GoSL) வரியாக 2024ஆம் ஆண்டில் செலுத்தியிருந்தது.

கம்பனி மட்டத்தில், 2024 டிசெம்பர் மாதமளவில் SLT உறுதியான வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. வருமானம் 2.3%இனால் உயர்ந்து ரூ.71.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. கம்பனியின் புரோட்பான்ட் பிரிவு 5.4%இனால் உயர்வடைந்திருந்தது. இதில் FTTH சேவைகள் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன. நிறுவனசார் வருமானம் 11.8%இனால் உயர்ந்திருந்தன. அரச துறை மற்றும் சிறிய,நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை பிரிவுகள் முறையே 11.0% மற்றும் 23.6% வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. செலவு கட்டுப்படுத்தல் முயற்சிகளினூடாக குறிப்பிடத்தக்களவு பெறுபேறுகளை எய்த முடிந்திருந்தது. தொழிற்பாட்டு செலவுகளில் 2.2% குறைவை அவதானிக்க முடிந்தது. அதில், AMC செலவுகளில் குறிப்பிடத்தக்களவு சேமிப்பு மற்றும் internet backboneகட்டணங்கள் போன்றன அடங்கியிருந்தன. 2024 நிதியாண்டில் நிறுவனம் ரூ.2.1 பில்லியனை தேறிய இலாபமாக பதிவு செய்திருந்தது.

2024ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் SLT வலுவான செயல்திறனை வெளிப்படுத்தியது, வருமானம் ரூ.18.3 பில்லியனை எட்டியது, இது 2023இன் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும்போது 3.9% அதிகரிப்பைக் காண்பித்தது. இந்த வளர்ச்சி முதன்மையாக பல வருமான வழிமுறைகளால் உந்தப்பட்டது, புரோட்பான்ட் வருமானம் 10.2% அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. இதில் FTTH சேவைகள் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன. நிறுவனசார் துறை வருமானம் 11% அதிகரித்திருந்தது. இதில்வலையமைப்பு, இணையம் மற்றும் நிர்வகிக்கப்பட்ட சேவைகளிலிருந்து அதிகரித்த வருமானம் மூலம் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. அரசுதுறை 14.3% ஈர்க்கக்கூடிய வளர்ச்சியைக் காட்டியது, அதே நேரத்தில் சிறிய, நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை துறை வருவாய் 20.9% அதிகரித்துள்ளது.

காலாண்டில், நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறன் கணிசமாக மேம்பட்டது, செயல்பாட்டு இலாபம் 17% இனால் அதிகரித்து ரூ.1.8 பில்லியனாக உயர்ந்தது. இதில், வினைத்திறனான செலவு நிர்வாகம் மற்றும் தேய்மானத்தில் 4.6% குறைப்பு ஆகியனபங்களிப்பு செய்திருந்தன. இதன் விளைவாக, SLT 2024இன் நான்காம் காலாண்டில் ரூ.909 மில்லியன் தேறிய இலாபத்தைப் பதிவு செய்தது.







# கச்சத்தீவு திருவிழா...

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் சனிக்கிழமை(15) பிற்பகல் ஆரம்பமானது.

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழாவில் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் பேரருட் தந்தை லூர்து ஆனந்த் ஆண்டகை, யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் திருவிழா சிறப்புத் திருப்பலி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(16) காலை ஏழு மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழாவிற்கு இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வருகைதந்திருந்த மக்கள் பங்கேற்றிருந்தனர்.

- நிதர்சன் வினோத்























அமெரிக்கா

அமெரிக்காவுக்கு பயணிக்க

# 41 நாடுகளுக்கு தடை?



புதிய தடை விதிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 41 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கா வருவதற்கு விரைவில் தடை விதிக்க, ட்ரம்ப் நிர்வாகம் பரிசீலித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அமெரிக்க அதிகாரிகள் வட்டாரத்தில் இருந்து தங்களுக்குக் கிடைத்த வரைவு அறிக்கையின் அடிப்படையில் ரோய்ட்டர் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வரைவு அறிக்கையில் மொத்தம் 41 நாடுகள் 3 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் குழுவில் ஆப்கானிஸ்தான், ஈரான், சிரியா, கியூபா, வடகொரியா உள்ளிட்ட 10 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை முற்றிலும் நிறுத்திவைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, இரண்டாவது குழுவில் எரித்ரியா, ஹைதி, லாவோஸ், மியன்மார், தெற்கு சூடான் ஆகிய 5 நாடுகள் உள்ளது. இந்த நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவது பகுதி அளவில் நிறுத்தி வைக்கப்படும். சுற்றுலா, மாணவர் விசாக்கள் மற்றும் பிற புலம்பெயர்வு விசா பெறுவதை இது பாதிக்கும்.

மூன்றாவது குழுவில், பாகிஸ்தான், பூட்டான், மியன்மார் உள்ளிட்ட 26 நாடுகள் உள்ளன. இந்த நாடுகளின் அரசுகள் 60 நாட்களுக்குள் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முயற்சிக்கவில்லை என்றால் அமெரிக்க விசா வழங்கலை நிறுத்தி வைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

இது குறித்து பெயர் கூறவிரும்பாத அதிகாரி ஒருவர் கூறுகையில்,

இந்தப் பட்டியலில் மாற்றம் ஏற்படலாம். இந்தப் பட்டியலுக்கு வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ உட்பட அரசு நிர்வாகம் இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை" என்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் முதன்முறையாக பதவி வகித்தபோது, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் 7 நாடுகளின் மக்களுக்குப் பயணத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## 19இல் பூமியை வந்தடைவார் சுனிதா?

நாசா விஞ்ஞானிகளுடன் ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு, ஞாயிற்றுக்கிழமை (16) காலை சென்றடைந்துள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ஐ.எஸ்.எஸ்.) கடந்த ஆண்டு ஜூன் 5ஆம் ஆண்டு ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஆய்வு பணிக்காக சென்ற பச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லயம்ஸ் ஆகியோரை பூமிக்கு அழைத்து வருவதற்காக அனுப்பப்பட்ட டிராகன் விண்கலத்துடன் பால்கன் 9 ரக ரொக்கெட் ஒன்று சனிக்கிழமை (15) அதிகாலை புறப்பட்டு சென்றது.


இந்த ரொக்கெட் சனிக்கிழமை (15) இரவு 11.30 மணியளவில் ஐ.எஸ்.எஸ்.-சுக்கு சென்றடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், நாசா குழுவினர் ஞாயிற்றுக்கிழமை (16) காலை 9.40 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்றடைந்துள்ளனர். இந்த நடவடிக்கையை கண்காணித்த விண்கல குழுவினர், எதிர்வரும் 19ஆம் திகதி வில்மோர் மற்றும் வில்லயம்ஸ் இருவரும் அந்த விண்கலத்தில் புறப்பட்டு பூமிக்கு திரும்புவார்கள் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

அமெரிக்காவில் சூறாவளி:

## 26 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவில், சூறாவளி பாதிப்புக்கு இலக்காகி, 26 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியாக மிசவுரி அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த பகுதியில், சூறாவளி பாதிப்புக்கு இலக்காகி 12 பேர் உயிரிழந்துள்ளனர். இதில், பல்வேறு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன.


வாகனங்கள் வீதியில் கவிழ்ந்து கிடந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீடுகளும் இடிந்து விழுந்தன. சுவர்கள் மீது மக்கள் நடந்து செல்லும் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

அர்கான்சாஸ் மாகாணத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 8 கவுன்டி பகுதிகளைச் சேர்ந்த 29 பேர் காயமடைந்தனர். டெக்சாஸ் மாகாணத்தில் அமரில்லோ பகுதியில் ஏற்பட்ட புழுதி புயலின்போது, கார் விபத்து ஏற்பட்டதில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் ஏற்பட்ட சூறாவளியால் புழுதி புயலும் வீசி பாதிப்புகளை அதிகரித்து வருகிறது. நாடு முழுவதும் 100க்கும் மேற்பட்ட காட்டுத்தீ சம்பவங்கள் ஏற்பட்டு உள்ளன. 10 கோடி பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். கனடா எல்லையில் இருந்து டெக்சாஸ் நோக்கி மணிக்கு 130 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக்

## ISISஇன் முக்கிய தலைவர் பலி



ஈராக் உளவுத்துறையுடன் இணைந்து அமெரிக்கப்படை நடத்திய ஏவுகணை தாக்குதலில், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் செயற்பாடுகளைக் கவனித்து வந்த முக்கியத் தலைவர் அபு காதிஜா உயிரிழந்துள்ளார்.

இவர் உலகின் பல நாடுகளில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் செயல்பாடுகளை ஈராக்கிலிருந்தபடியே கவனித்து வந்தார்.

இந்த நிலையில், ஈராக்கின் அல் அன்பர் பகுதியில் அபு காதிஜாவின் நடமாட்டம் இருப்பதாக, ஈராக் உளவுத்துறைக்குத் தகவல் கிடைத்தது. இத்தகவல் அங்குள்ள அமெரிக்க இராணுவத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அபு காதிஜா பற்றிய தகவல் உறுதி செய்யப்பட்டதும், அங்கு அமெரிக்க இராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அபு காதிஜா மற்றும் அவருடன் இருந்த மற்றொருவரும் உயிரிழந்தனர்.

டிஎன்ஏ பரிசோதனைக்குப்பின் அபு காதிஜாவின் உயிரிழப்பை ஈராக் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

அபு காதிஜா கொல்லப்பட்டதை ஈராக் பிரதமர் முகமது ஷியா அல்-சூடானி வரவேற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், "இராக்கில் ஐஎஸ்எஸ் தலைவர் அமெரிக்க இராணுவத்தினர் வேட்டையாடியுள்ளனர். அவரது பரிதாப வாழ்க்கை முடிவடைந்துவிட்டது. இராக் மற்றும் குருது அரசு ஒத்துழைப்புடன் இந்த ஆபரேஷன் மேற்கொள்ளப்பட்டது" என தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசம்

பாட்டு சத்தத்தை குறைக்க சொன்னதால்

## தகராறு; வயோதிபர் அடித்துக் கொலை



மத்தியப் பிரதேசம் மாநிலம் மைஹார் மாவட்டத்தில், ஹோலி கொண்டாட்டத்தின்போது, பாட்டு சத்தத்தைக் குறைக்க சொன்னதால் ஏற்பட்ட தகராறில் வயோதிபர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மன்கிசார் கிராமத்தைச் சேர்ந்தவர் சங்கர் கேவாட். வெள்ளிக்கிழமை (14) இரவு, சங்கரின் பக்கத்து வீட்டைச் சேர்ந்த தீபு கேவாட் என்பவர் ஹோலி கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சத்தமாகப் பாட்டு போட்டுள்ளார். இதனால் சங்கரின் குழந்தைகளால் படிக்க முடியவில்லை.

இதையடுத்து சங்கர், தீபுவிடம் பாட்டு சத்தத்தைக் குறைக்குமாறு கூறியுள்ளார். இதில் ஏற்பட்ட தகராறில் தீபுவும் அவரது உறவினர்கள் 5 பேரும் சேர்ந்து சங்கர் மற்றும் அவரது குடும்பத்தினரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதில் சங்கரின் தந்தை முன்னா கேவாட் (64 வயது) படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவரை மீட்டு, அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள், குறித்த வயோதிபர், ஏற்கெனவே இறந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தீபு மற்றும் அவரது உறவினர்கள் மீது பொலிஸார் கொலை வழக்குப்பதிவு செய்து, தலைமறைவாக உள்ளவர்களைத் தேடி வருகின்றனர்.




முதலாவது போட்டியில்

## பாகிஸ்தானை சுருட்டிய நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் ஞாயிற்றுக்கிழமை(16) நடைபெற்ற முதலாவது போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

பாகிஸ்தான்: 91/10 (18.4 ஓவ.) (துடுப்பாட்டம்: குஷ்டில் ஷா 32 (30) சல்மான் அக்ஹா 18 (20), ஜஹன்டட் கான் 17 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக்கப் டஃபி 4/14 [3.4], கைல் ஜேமிஸன் 3/8 [4], இஷ் சோதி 2/27 [4], ஸகரி போக்ஸ் 1/11 [3], மிஷெல் பிறேஸ்வெல் 0/28 [4])

நியூசிலாந்து: 92/1 (10.1 ஓவ.) (துடுப்பாட்டம்: டிம் செய்ஃபேர்ட் 44 (29), பின் அலென் ஆ.இ 29 (17), டிம் றொபின்ஸன் ஆ.இ 18 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அப்ரார் அஹ்மட் 1/15 [2.1])

போட்டியின் நாயகன்: கைல் ஜேமிஸன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது டுனேடினியில் செவ்வாய்க்கிழமை (18) காலை 6.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடர்:

## சமநிலையில் மியூனிச்-பேர்லின் போட்டி



ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெஸ்லிகா தொடரில், யூனியன் பேர்லினின் மைதானத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பயேர்ண் மியூனிச் சமப்படுத்தியது.

மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை லெரோய் சனே பெற்றதோடு, பேர்லின் சார்பாகப் பெறப்பட்ட கோலை பெனெடிக்ட் ஹொல்லர்பச் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பொரூசியா டொட்டமுண்டுடனான போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் வென்றது. லெய்ப்ஸிக் சார்பாக ஸ்கெவி சிமொன்ஸ், லொய்ஸ் ஒபென்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 62 புள்ளிகளுடன் முதலிடத்தில் மியூனிச் உள்ளது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசனும், 45 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மைன்ஸும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஐன்ரச்ட் பிராங்க்பேர்ட்டும் காணப்படுகின்றது. இதில் மற்றைய அணிகளை விட மியூனிச்சும், மைன்ஸும் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் சிற்றி – பிறைட்டன் போட்டி




இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

சிற்றி சார்பாக எர்லிங் ஹலான்ட், ஒமர் மர்மௌஷ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிறைட்டன் சார்பாக பெர்விஸ் எஸ்டுபினன் ஒரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியது. எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜேக் ஓ பிறைன் பெற்றதோடு, வெஸ்ட் ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை தோமஸ் சூசெக் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 70 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 55 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 54 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 49 புள்ளிகளுடன் நான்காலிடத்தில் செல்சியும் காணப்படுகின்றது. இதில் லிவர்பூலும், பொரெஸ்டும் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.




## ஐ.பி.எல்: டெல்லி கப்பிட்டல்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) இதுவரையில் சம்பியனாயிருக்காத டெல்லி கப்பிட்டல் இம்முறை அதை மாற்றி எழுதும் நோக்கோடு களமிறங்குகின்றது.

கடந்த பருவகாலத்தில் அணித்தலைவராக இருந்த றிஷப் பண்டை தக்க வைக்காத டெல்லி, அக்ஸர் பட்டேலை இம்முறை அணித்தலைவராக்கியிருக்கிறது.

அன்றிச் நொர்கியா உள்ளிட்டோரை இழந்தாலும் மிற்செல் ஸ்டார்க், தங்கராசு நடராஜன், மோஹித் ஷர்மாவின் வருகையால் அக்ஸர், குல்தீப் யாதவ், முகேஷ் குமார் என கடந்த முறை பந்துவீச்சுக் கூட்டணி பலமாகியுள்ளது.

இது தவிர லோகேஷ் ராகுல், கருண் நாயர், பப் டு பிளெஸி, அஷுதோஷ் ஷர்மா, சமீர் றிஸ்வியின் வருகையும் அபிஷேக் பொரேல், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், ஜேக் பிறேஸர்-மக்குர்க் என துடுப்பாட்டக்கூட்டணியின் பலப்படுத்தியிருப்பதால் இம்முறை தகுதிகாண் போட்டிகளுக்கு டெல்லி முன்னேறும் என நம்பப்படுகிறது.

எதிர்பார்கப்படும் பதினொருவர்: லோகேஷ் ராகுல், ஜேக் பிறேஸர் மக்குர்க், பப் டு பிளெஸி, கருண் நாயர், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், அபிஷேக் பொரேஸ், அக்ஸர் பட்டேல், மிற்செல் ஸ்டார்க், குல்தீப் யாதவ், தங்கராசு நடராஜன்

தாக்கம் செலுத்தும் வீரர்கள்: அஷுதோஷ் ஷர்மா, மோஹித் ஷர்மா, சமீர் றிஸ்வி, தர்ஷன் நல்கன்டே.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 17, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.